தூத்துக்குடி நாடாளுமன்ற அலுவலகத்தில், கடலில் காணாமல் போன மீனவர் அண்ணாதுரையின் மனைவி சந்தன செல்வி, கணவர் கடலில் காணாமல் போனது குறித்து மேல் நடவடிக்கை எடுத்து எனது கணவரை கண்டுபிடிக்கவும், முதலமைச்சர் நிவாரண நிதி மற்றும் காணாமல் போன மீனவர்களின் குடும்பங்களுக்கு வழங்கும் மாதாந்திர உதவித் தொகை மற்றும் வேலை வழங்கவும் திமுக துணைப் பொதுச் செயலாளரும், நாடாளுமன்ற குழுத் தலைவருமான கனிமொழி கருணாநிதியை நேரில் சந்தித்து கோரிக்கை வைத்தார்.

### வக்பு மசோதா குறித்து நாடாளுமன்றத்தில் விவாதிக்க வேண்டும்

# யு.ஜி.சியின் புதிய விதிமுறைகள் குறித்து விவாதிக்க வேண்டும்

## மக்களவை தி.மு.க. குழு தலைவர் டி.ஆர்.பாலு வலியுறுத்தல்!

புதுடெல்லி, ஜன. 31-

வக்பு சட்டத்திருத்த மசோதா குறித்து நாடாளுமன்றத்தில் விவாதிக்க வேண்டும் என்று மக்களவை திமுக குழு தலைவர் டி.ஆர். பாலு வலியுறுத்தியுள்ளார்.

டெல்லியில் நடைபெற்ற அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் கலந்துகொண்ட பிறகு, மக்களவை திமுக குழு தலைவர் டி.ஆர்.பாலு, மாநிலங்களவை தி.மு.க. குழு தலைவர் திருச்சி சிவா ஆகியோர் கூட்டாக செய்தியாளர்களை சந்தித்தனர். அப்போது பேசிய டி.ஆர்.பாலு, வக்பு மசோதா விவகாரத்தில் நாடாளுமன்ற கூட்டுக்குழு தலைவர் எதிர்க் கட்சிகளின் திருத்தங்களை ஏற்கவில்லை என்றும் மசோதா குறித்து நாடாளுமன்றத்தில் விவாதிக்க வேண்டும் என்றும் வலியுறுத்தினார். மேலும், யுஜிசி புதிய விதிமுறைகள், ஆளுநர் ஆர்.என்.ரவியின் அத்துமீறல், சாதிவாரி கணக்கெடுப்பு, வெள்ள நிவாரணம், மீனவர் பிரச்சனை உள்ளட்டவை குறித்து நாடாளுமன்றத்தில் விவாதிக்க வேண்டும் என்றும் வலியுறுத்தினார்.

**திருச்சி சிவா குற்றச்சாட்டு!**

தொடர்ந்து பேசிய மாநிலங்களவை தி.மு.க. குழு தலைவர் திருச்சி சிவா, ஒன்றிய பா.ஜ.க ஆட்சியில், எதிர்க்கட்சிகளின் கவன ஈர்ப்பு தீர்மானங்கள் மீது நாடாளுமன்றத்தில் விவாதம் நடத்த அனுமதிப்பது இல்லை என்று குற்றஞ்சாட்டினார்

### இட ஒதுக்கீட்டிற்கு எதிராக வழங்கப்பட்ட தீர்ப்பை எதிர்த்து

# உச்சநீதிமன்றத்தில் தமிழ்நாடு அரசின் சார்பில் விரைவில் சீராய்வு மனு!

## அமைச்சர் மா.சுப்பிரமணியன் பேட்டி!

சென்னை, ஜன. 31 -

29.01.2024 உச்சநீதிமன்றத்தில் 3 நீதிபதிகள் கொண்ட அமர்வு ஒன்று சண்டிகர் யூனியன் பிரதேசத்தில் மருத்துவக் கல்லூரி மாணவர்கள் சேர்க்கை தொடர்பாக நடைபெற்ற வழக்கு ஒன்றில் மாநில அரசு மருத்துவ மாணவர்களின் இட ஒதுக்கீட்டிற்கு எதிராக தீர்ப்பு வழங்கப்பட்டிருக்கிறது. தமிழ் நாடு அரசு சார்பில் இந்த தீர்ப்பிற்கு எதிராக உச்சநீதிமன்றத்தில் விரைவில் சீராய்வு மனு தாக்கல் செய்யப்படும் என்று அமைச்சர் மா.சுப்பிரமணியன் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேற்று (30.01.2025) சென்னை, தலைமைச் செயலகத்தில் நடைபெற்ற பத்திரிக்கையார்கள் சந்திப்பில், நேற்று 29.01.2024 அன்று உச்சநீதிமன்றத்தில் 3 நீதிபதிகள் கொண்ட அமர்வு ஒன்று சண்டிகர் யூனியன் பிரதேசத்தில் மருத்துவக்கல்லூரி மாணவர்கள் சேர்க்கை தொடர்பாக நடைபெற்ற வழக்கு ஒன்றில் மாநில அரசு மருத்துவ மாணவர்களின் இடஒதுக்கீட்டிற்கு எதிராக தீர்ப்பு வழங்கப்பட்டிருக்கிறது. இந்த தீர்ப்பிற்கு எதிராக தமிழ்நாடு அரசு சார்பில் உச்சநீதிமன்றத்தில் சீராய்வு மனு தாக்கல் செய்யப்படவிருக்கிறது என்று தெரிவித்தார்கள்.

அதன் விவரம் வருமாறு:

29.01.2024 அன்று உச்சநீதிமன்றத்தில் 3 நீதிபதிகள் கொண்ட அமர்வு ஒன்று சண்டிகர் யூனியன் பிரதேசத்தில் மருத்துவக்கல்லூரி மாணவர்கள் சேர்க்கை தொடர்பாக நடைபெற்ற வழக்கு ஒன்றில் தீர்ப்பு வழங்கப்பட்டிருக்கிறது. தமிழ் நாட்டைப் பொறுத்தவரை 69% இடஒதுக்கீடு தொடர்ந்து அளிக்கப்பட்டு வருகிறது மற்றும் தமிழ்நாட்டை பூர்வீகமாக கொண்ட அல்லது தமிழ்நாட்டில் பிறந்த மாணவர்களுக்காக 50 % இடங்கள் ஒதுக்கீடு செய்யப்படுகிறது. மாநில ஒதுக்கீடு சமூக நீதியை உறுதி செய்யும் விதமாக செயல்பட்டு வருகிறது. எனவே தமிழ்நாட்டைப் பொறுத்தவரை சமூக நீதியை கடைப்பிடிப்பதில் இடஒதுக்கீடு என்பது இன்றியமையாத ஒன்றாக தொடர்ந்து இருந்து வருகிறது. இந்த தீர்ப்பு செயல்படுத்தப்பட்டால் மாநிலத்தின் உரிமைகள் பாதிக்கப்படுவதுடன், மாநிலத்தில் உள் ஒதுக்கீடுகள் பாதிக்கப்படும். இந்த தீர்ப்பில் அதாவது எய்ம்ஸ், ஜிப்மர் போன்ற மருத்துவமனைகளில் மருத்துவம் பயிலும் மாணவர்களுக்கு மட்டுமே இந்த ஒதுக்கீடுகள் செல்லும் எனவும், மற்ற ஒதுக்கீடுகளும் குறிப்பாக மாநிலத்தில் வசிப்பிடம் ரீதியான அதாவது மாநிலத்தில் வாழ்பவர்களுக்கு அல்லது பிறந்தவர்களுக்கு என்று குறிப்பிட்ட எந்த ஒதுக்கீடும் கிடையாது என்று உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்து ள்ளது.

இந்தியாவிலேயே தமிழ் நாட்டில் தான் மருத்துவக்கட்டமைப்பு அதிகமாக இருக்கிறது. மேலும் MD/MS/MDS/DM/MCH போன்ற படிப்புகளுக்கான சேர்க்கையும் அதிகமான இடங்கள் உள்ளன. குறிப்பாக தமிழ் நாட்டைப் பொறுத்தவரை MD/MS/Diploma மருத்துவ பட்டப்படிப்பு இடங்கள் 2,294 உள்ளன. அந்தவகையில் தமிழ்நாட்டு மாணவர்களுக்கென்று இது வரை 50% இடஒதுக்கீடு அடிப்படையில் 1207 மாணவர்கள் பயன்பெற்று வருகின்றனர். அகில இந்திய ஒதுக்கீடு என்கின்ற வகையில் 1087 பேர் வருடந்தோறும் பயன்பெற்று வருகின்றனர்.

இந்தத் தீர்ப்பிற்கு பிறகு எதிர்வரும் ஆண்டுகளில் முழுமையாக முதுநிலை மருத்துவ பட்டப்படிப்புகளில் 1200க்கும் மேற்பட்ட இடங்கள் பறிபோகும் அபாய நிலை உருவாகியிருக்கிறது. இந்த இடங்கள் சொந்த மாநிலத்திற்கு மட்டுமல்லாது இந்தியாவில் உள்ள அனைத்து மாநிலங்களுக்கும் ஒதுக்கீடு செய்யப்படுவதனால் அந்தந்த மாநில உரிமைகள் பாதிக்கப்படும். ஏற்கெனவே 50% மருத்துவ பட்டமேற்படிப்பு மாண வர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு இதர மாணவ, மாணவியரும் தமிழ் நாட்டில் படித்து வருகிறார்கள். இந்த ஆண்டிற்கான மருத்துவ மாணவர்களுக்கான பட்டமேற்படிப்பு மாணவர்களுக்கான சேர்க்கை 2 சுற்றுகள் முடிவடைந்த நிலையில் 3ஆம் சுற்று நடைபெறவிருக்கிறது.

இந்தநிலையில் மாணவர்கள் ஏராளமான பேர் பயிலவும் தொடங்கி விட்டார்கள். எனவே இந்த தீர்ப்பினால் இந்த ஆண்டிற்கு எந்தவிதமான பாதிப்புகளும் இருக்காது என்றாலும் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலோடு, இந்த தீர்ப்பு சம்மந்தாக மருத்துவ வல்லுநர்களோடு ஆலோசனை நடைபெற்று வருகிறது. மிக விரைவில் இந்த ஆலோசனைக்குப் பிறகு மாநில உரிமைகள் பாதிக்கப்படாமல் இந்த தீர்ப்பிற்கு எதிராக சீராய்வு மனு உச்சநீதிமன்றத்தில் தமிழ்நாடு அரசு சார்பில் தாக்கல் செய்யப்படவிருக்கின்றது.

மருத்துவத்துறையைப் பொறுத்தவரை இளங்கலை பட்டப்படிப்பு அல்லது முதுகலை பட்டப்படிப்பாக இருந்தாலும் ஏற்கெனவே தமிழ்நாட்டில் 15% இளங்கலை மருத்துவ இடங்களைப் பொறுத்தவரை அகில இந்திய ஒதுக்கீட்டில் தரப்பட்டு வருகிறது. முதுகலை பட்டப்படிப்பில் 50% வரை தரப்பட்டு வருகிறது.

இந்தநிலையில் கடந்த 2020 ஆம் ஆண்டு ஒன்றிய அரசின் சார்பில் திடீரென்று Super Speciality என்கின்ற மருத்துவ இடங்களை நமக்கான 50% இடஒதுக்கீட்டைப் பறித்து 100% அகில இந்திய ஒதுக்கீடு என்று மாற்றினார்கள். உடனடியாக தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அதற்காக மாநில உரிமைகள் பறிக்கப்படுவதும், பாதிக்கப்படுவதையும் உடனடியாக தடுத்து நிறுத்திட வேண்டும் என்கின்ற வகையில் மூத்த வழக்கறிஞர் வில்சன் அவர்களை கொண்டு உச்சநீதிமன்றத்தில் வழக்கு தொடுத்து Super speciality இல் படிக்கும் இளங்கலை, முதுகலை பட்ட மேற்படிப்புகளுக்கு இடஒதுக்கீடு குறிப்பாக தமிழ்நாட்டிற்கு பெற்று தந்தார்கள்.

2020இல் வந்த அந்த ஆணைக்குப் பிறகு 2022இல் அரசுப் பணியில் இருக்கின்ற மருத்துவர்களின் உரிமை தமிழ் நாடு முதலமைச்சர் அவர்களின் மூலம் காப்பாற்றப்பட்டு விட்டது. எனவே அந்த வகையில் இந்த இடஒதுக்கீட்டிற்கு ஏற்பட்டிருக்கின்ற பாதிப்பினால் 69% இடஒதுக்கீடு என்பது தமிழ்நாட்டில் வரலாற்று சிறப்பு மிக்க வகையில் அனைத்து மக்களையும் சமூக நீதி கோட்பாட்டில் மிகப் பெரிய அளவில் வெற்றிக்கு வழி வகுத்துக் கொண்டிருக்கிறது. இது பெரிய அளவிலான பாதிப்பை ஏற்படுத்தும், எனவே மாநில அரசின் 69% இட ஒதுக்கீட்டிற்கு பெரிய அளவில் பாதிப்பை ஏற்படுத்தும்.

இதுமட்டுமல்லாது தனியார் கல்லூரிகளில் இருக்கின்ற 50% இடஒதுக்கீட்டிற்கும் இதனால் பாதிப்புகள் ஏற்படும். இதனையும் கடந்து மைனாரிட்டி இன்ஸ்டியூசன் என்கின்ற வகையில் தமிழ்நாட்டில் இருக்கின்ற இந்த மாதிரியான நிறுவனங்களுக்கும் கூட Resident base என்று வருகின்றபோது அவர்களுக்கும் இந்த இடங்கள் கொடுப்பதில் பாதிப்புகள் ஏற்படும். முதுகலை மருத்துவ பட்டமேற்படிப்பினை பொறுத்தவரை மாநில அரசின் செலவினால் மட்டுமே முதுகலை மருத்துவ பட்டப்படிப்புகளுக்கு செலவிட்டு நிர்வகித்துக் கொண்டிருக்கிறது. இந்தநிலையில் இதனை முழுமையாக ஒன்றிய அரசிற்கு தாரை வார்க்கும் இந்த தீர்ப்பு என்பது நிச்சயம் ஏற்றுக் கொள்ள முடியாத தீர்ப்பாக அமைந்துள்ளது.

எனவே தான் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆலோசனைகளைப் பெற்று மிக விரைவில் இதற்கு எதிராக சீராய்வு மனு தாக்கல் செய்யப்படவிருக்கிறது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் மா.சுப்பிரமணியன் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

இப்பத்திரிக்கையாளர் சந்திப்பில் மருத்துவக்கல்வி மற்றும் ஆராய்ச்சி இயக்குநர் மரு.சங்குமணி, தேர்வுக்குழு அலுவலர்கள் மற்றும் இதர அரசு அலுவலர்கள் உடனிருந்தனர்.

### களக்காடி எல்லப்பன் தலைமை! எம்.கிருஷ்ணமூர்த்தி முன்னிலையில்

# ஜாபர்கான்பேட்டையில் பேரறிஞர் அண்ணா நினைவுநாள் நிகழ்ச்சி!

## திருவுருவச் சிலைக்கு அமைச்சர் மா.சுப்பிரமணியன் மாலை அணிவிக்கிறார்!

சென்னை, ஜன.31-

சைதை மேற்குப் பகுதி தி.மு.க. சார்பில் 139-வது வட்டம் ஜாபர்கான்பேட்டை, கங்கையம்மன் கோவில் அருகில் உள்ள அறிஞர் அண்ணா நினைவு நாளை முன்னிட்டு அண்ணா சிலைக்கு வரும் 03.02.2025 அன்று திங்கட்கிழமை காலை 6.30 மணியளவில் பகுதி அவைத் தலைவர் களக்காடி எல்லப்பன் தலைமையில் பகுதிச் செயலாளர் எம்.கிருஷ்ணமூர்த்தி முன்னிலையில் நினைவு நாள் நிகழ்ச்சி நடைபெறுகின்றது.

இந்நிகழ்ச்சியில் அறிஞர் அண்ணா அவர்களின் சிலைக்கு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மாவட்டச் செயலாளர் மா.சுப்பிரமணியன் மாலை அணிவித்து மரியாதை செலுத்துகிறார்.

மேலும் இந்நிகழ்ச்சியில் வழக்கறிஞர் எம்.ஸ்ரீதரன், சைதை மா.அன்பரசன், வழக்கறிஞர் ப.சுப்பிரமணியன், த.சம்பத், ஆர்.ரமேஷ், வி.பி.ஜானகிராமன், கவிதா கௌதமன், சைதை சாதிக், அட்கோ கமலநாதன், சை.மு.சேகர், ஆர். கிருஷ்ணகுமார், எம்.எஸ்.ஹரிபாபு, மணிகண்டன், நாடிமுத்து, தா.மோகன்குமார், ஜி.கே.இராமச்சந்திரன், வீ.மதிவாணன், டி.என்.சிவமணி, மு.கதிரவன், பொ.பரத்குமார், பி.எஸ். முருகன், அ.அயாத்பாஷா, சாந்தி சுந்தரம், இ.வரதன், மா.ஏழுமலை, பி.எல்.பிரகாஷ், பூபதி வெங்கடேசன், சுபதி தீனதயாளன், த.மணி, ஜூம் பிரபு, எல்.சந்திரன், சி.டி.காசிநாதன், து.முரளி, வி.சபரி, அ. சுப்பிரமணி மற்றும் பலர் கலந்துகொள்கின்றனர்.

நிகழ்ச்சிக்கான ஏற்பாட்டினை பகுதி அவைத் தலைவர் களக்காடி எல்லப்பன் செய்துள்ளார்.

இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு நேற்று (30.01.2025) ராயபுரம் மண்டலம் வார்டு-65 ல் உள்ள சண்முகம் தெருவில் ரூ. 36,76 இலட்சம் மதிப்பீட்டில் புதிய மகளிர் உடற்பிற்சிக் கூடம் கட்டும் பணியினை அடிக்கல் நாட்டித் தொடங்கி வைத்தார். உடன் பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் ஆர். பிரியா ராஜன், வடக்கு வட்டார துணை ஆணையாளர் கட்டா ரவி தேஜா, மண்டலக்குழுத் தலைவர் பி.ஸ்ரீராமுலு, மாமன்ற உறுப்பினர் நாஹா நவீன் மற்றும் அலுவலர்கள் உள்ளனர்.

### அமைச்சர் பி.கே.சேகர்பாபு தலைமையில்

# 76(அ) வட்ட துணைச் செயலாளர் ம.வெற்றிவேல் இல்ல நிகழ்ச்சி!

## மேயர் பிரியா ராஜன் - கலாநிதி வீராசாமி எம்.பி. - ப.தாயகம்கவி எம்.எல்.ஏ. முன்னிலை

சென்னை, ஜன. 31 -

சென்னை கிழக்கு மாவட்டம் திரு.வி.க.நகர் தெற்குப் பகுதி 76(அ) வட்ட தி.மு.க. துணைச்செயலாளர் ம.வெற்றிவேல் ச.ராதிகாதேவி ஆகியோரின் மூத்த மகள் வி.செல்வராஜேஸ்வரி என்னும் சியாமளா , சென்னை மகாகவிபாரதி நகரில் வசிக்கும் ஆர்.முரளி எம்.பானு இணையரின் இளைய மகன் எம்.தீபக் ஆகியோரின் திருமண உறுதி செய்யும் நிச்சயதார்த்த விழா சென்னை 39, வியாசர்பாடி, மகாகவிபாரதிநகர், மேற்கு நிழற்சாலை, அம்பேத்கர் கல்லூரி சிக்னல் அருகில் அமைந்துள்ள C1 சீலம் எலைட் பார்ட்டி ஹாலில் 02.02.2025 ஞாயிற்றுக்கிழமை அன்று காலை 11.00 மணியளவில் நடைபெறுகிறது.

இந்த திருமண நிச்சயதார்த்த விழாவிற்கு இந்து சமய அறநிலையத் துறை மற்றும் சென்னை பெருநகர வளர்ச்சி குழும அமைச்சரும் சென்னை கிழக்கு மாவட்ட செயலாளருமான அமைச்சர் பி.கே.சேகர்பாபு தலைமையேற்று நடத்திவைக்கிறார்.

இவ்விழாவில் மேயர் பிரியா ராஜன், கழக அயலக அணித்தலைவர் கலாநிதி வீராசாமி எம்.பி., ப.தாயகம்கவி எம்.எல்.ஏ. ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

மேலும் இவ்விழாவில் பகுதி செயலாளர் எம்.சாமி கண்ணு, பொதுக்குழு உறுப்பினர் துளசிங்கம், பகுதி நிர்வாகிகள் அ.கோவிந்தன், த.கருணாநிதி, அ.கருணாநிதி, வட்ட செயலாளர்கள் எஸ்.வெங்கடேசன், எஸ்.சசிகுமார், எம்.தமீம், பரிமளா சுரேஷ்பாபு.

மாமன்ற உறுப்பினர்கள் எஸ்.தமிழ்செல்வி சசிகுமார், மு.சரவணன். மாவட்ட பிரதிநிதிகள் கி.நாகலிங்கம், நெல்லை மா.முத்தையா, எச்.திவாகர், வே.து.தாமரைச்செல்வன்.

மாவட்ட அணிகளின் துணை அமைப்பாளர்கள் கனல்கங்கா, எஸ்.சதீஷ்குமார், எம்.செந்தில்குமார், பகுதி அமைப்பாளர்கள் சாந்தி மாசிலாமணி, எம்.சக்திவேல், பா.பி.தாஸ், ஈஸ்வரிகண்ணன், மெடிக்கல் சதீஷ். வட்ட நிர்வாகிகள் என்.ஜீவநாதன், சத்யா நாகலிங்கம், ஆர்.ஜான் (எ) ரவி. பகுதி பிரதிநிதிகள் பி.வினோத், வி.கிருஷ்ணன், டி.கமலகண்ணன், எம்.பாட்ரிக், என்.கோபாலகிருஷ்ணன். பகுதி அணிகளின் துணை அமைப்பாளர்கள் சபரிவெங்கடேசன், டி.திலகவதி, ஜோதி,

கௌதம் இளங்கோவன். மற்றும் ஏ.மூவேந்தன், வ.புகழேந்தி, புகழ் செந்தில்,

அன்புராஜ், என்.சந்திரசேகரன், எம்.ராஜேஷ்குமார், ஏ.இருதயராஜ், ஏ.நெல்சன்ஜான், சி.மாவீரன், வெங்கடேசன், எம்.அசோக்குமார், ஜெயந்திசேகர், சரவணன்,

ஆர்.தேவா, சுகன்யா, கே.அருள்மொழி, அஸ்லாம் பேக், மெடிக்கல் லயன் . ரமேஷ், ஹரிகிருஷ்ணன் மற்றும் கழகத்தினர் கலந்துகொள்கின்றனர்.